கூட்டம் எண். 2 /2025 – 2026

ஆரணி நகராட்சி
நாள். ~~17.07.2025~~ 15/7/2025

சாதாரணக்கூட்டம் அறிவிப்பு

21.07.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகர மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக்கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்
ஆரணி நகராட்சி

திருக்குறள்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று குறள் எண். 10 – 100

பொருள்கள்

1. நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீன் – 2025 மாத நாட்குறிப்பு
   அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.
2. நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் – 2025 மாத நாட்குறிப்பு
   அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.
3. பொது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் 20வது கூட்ட நடவடிக்கை நாள். 23.04.2025ல் ஆரணி நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025 – 2026ன் கீழ் ஆரணி நகராட்சி காய்கறி மார்க்கெட் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையம் நவீன மயமாக்கும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 6.40 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த பேருந்து நிலையம் மற்றும் பல்பொருள் வணிக வளாக கட்டிடம் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்திட மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
   அலுவலக குறிப்பு. தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை – 28 அவர்களின் உரிய அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
   (கோப்பு எண். 1088/இ1/2025)
4. ஆரணி நகராட்சி SFC – School Improvement Grant – Capital works – for the Year 2025 – 2026ன் கீழ் குறிப்பிட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் Construction / Reconstruction of Anganvadi Centers பணிகள் மேற்கொள்ள

— Ward-19.
— Drainage Culvert.
VHC Nagar

Ward-27
Bill ?

28.04.2025 அன்று கோரப்பட்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | Construction of Toilet at Dr. Ambethkar Nagar – Near Pillaiyar koil street, Anganwadi Centre 33606160306 டாக்டர் அம்பேத்கார் நகர் பிள்ளையார் கோயில் தெருவில் புதிய அங்கன்வாடி மற்றும் கழிப்பறை கட்டுதல் | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.36% அதிகம் |
| 2 | Reconstruction of New Anganwadi Building Ponnusamy Street, 33606160320 பொன்னுசாமி தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.10% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.43% அதிகம் |
| 3 | Reconstruction of New Anganwadi Building Rajaji Street, 33606160322 ராஜாஜி தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.12% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.29% அதிகம் |
| 4 | Reconstruction of New Anganwadi Building Subramaniaswami koil street, 33606160326 சுப்பிரமணிசாமி கோவில் தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.12% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.23% அதிகம் |
| 5 | Reconstruction of New Anganwadi Building Thiruppur Kumaran Street, 33606160327 திருப்பூர் குமரன் தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.51% அதிகம் |
| 6 | Reconstruction of New Anganwadi Building Nadagasalaipettai Street, 33606160318 நாடகசாலைபேட்டை தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் | 16.60 | R.நேரு<br>N. பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.51% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி பணிகள் திட்டப் பணிகள் என்பதாலும், பணியினை உடன் முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 2123/இ1/2024.

5. ஆரணி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (Tamil Nadu Urban Roads) Infrastructure Project) (TURIP) 2025 – 2026 திட்டத்தின் சாலைப் பணிகள் மேற்கொள்ள 28.04.2025 அன்று மாநில அளவில் கோரப்பட்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | ஆரணி நகராட்சி வார்டு எண். 5 ஆறுமுகம் தெரு முதல் குறுக்கு தெரு, வார்டு எண். 6 பழைய சாந்தா தெரு முதல் குறுக்குத் தெரு, வார்டு எண். 6 புதிய சாந்தா தெரு, 5வது குறுக்கு தெரு, வார்டு எண். 8, பெருமாள் தெரு, காமாட்சி அம்மன் கோயில் தெரு, வார்டு எண். 9 அப்பணன் தெரு, தரணித் தெரு, லைணா தெரு, வார்டு எண். 10, வி.டி.எஸ். மெயின் ரோடு, வார்டு எண். 19 தென்னமரத் தெரு, வார்டு எண். 20 வடியராஜா மெயின் தெரு, வார்டு எண். 21, டாக்டர் அம்பேத்கார் மெயின், வார்டு எண். 22 அப்பால் தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | ரூ. 74.00 | R. நேரு<br><br>D. சத்தியநாராயணன் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.03% அதிகம் |

அலுவலக குறிப்பு: 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்..

2. மேற்படி பணிகள் திட்டப் பணிகள் என்பதாலும், பணியினை உடன் முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 100/2025/இ1

6. பொது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் 20வது மற்றும் 21வது கூட்ட நடவடிக்கை நாள். 23.04.2025, 30.04.2025ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025–2026ன் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி ரூ. | நகராட்சி பங்களிப்பு தொகை ரூ | மதிப்பீடு ரூ. கோடி |
|---|---|---|---|---|
| 1. | ஆரணி நகராட்சி காய்கறி மார்க்கெட் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையம் நவீன மயமாக்கும் பணிகள் | ரூ. 3.20 கோடி | ரூ. 3.20 கோடி | ரூ. 6.40 கோடி |
| 2. | ஆரணி நகராட்சி பரசுராமன் தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் மேம்படுத்தும் பணிகள் | 0.20 | – | 0.20 |
| 3. | சிப்பம் – 1 வார்டு எண். 16, பாலாஜி நகர், 2வது குறுக்குத் தெரு, வார்டு எண். 17, பிரகாஷ் நகர் பகுதியில் கால்வாய் அமைத்தல் பணிகள் | 0.29 | – | 0.29 |

அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

7. மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற உத்தரவினை நடைமுறைப்படுத்திடும் விதமாக ஆரணி நகராட்சி எல்லைக்குள் வைக்கப்பட்டுள்ள அரசியல் மற்றும் இதர கொடி கம்பங்கள் அனைத்தையும் அகற்றிட நடவடிக்கை தொடரப்பட்டு நகரப்பகுதி முழுவதும் இருந்த 39 எண்ணிக்கையிலான கொடி கம்பங்கள் மற்றும் கொடி கம்பங்கள் வைக்க அமைக்கப்பட்ட சிமெண்ட் பீடங்கள் அனைத்தும் ஜேசிபி இயந்திரம் கொண்டு காவல் துறை உதவியுடன் நகராட்சி அலுவலர்கள் துணையோடு இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு ஜேசிபி இயந்திரம் மற்றும் இதர வாகனங்களை வாடகை அடிப்படையில் எடுத்து பணியினை முடிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 11,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்..

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3.சென்னை உயர்நீதி மன்ற உத்தரவினை செயல்படுத்தும் விதமாக நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். 137/2025/எப்1.

8. ஆரணி நகராட்சி 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023 மற்றும் 2023-2024ஆம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Tied Grand & Untied Grandன் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 04.04.2025 அன்று குறுகிய கால மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பிடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | Tied Grant 2022-2023 Repair and Renovation works to mini power pump and flushing of Borewell in W.No. 1 to 33<br>ஆரணி நகராட்சி 1முதல் 33 வரையில் உள்ள சிறுமின்விசைபம்புகள் புனரமைத்தல் பணி | 12.28 | திரு. த. சத்திய நாராயணன்<br>திருமதி. எஸ். உஷாராணி | மதிப்பீட்டை விட 0.10% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.49% அதிகம் |
| 2. | Untied Grant 2022-23 Construction of Storm Water Drain in pillaiyar koil street, Ward No. 07<br>வார்டு எண் 7 பிள்ளையார் கோயில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 11.18 | திரு. ரா. நேரு<br>திரு. என். பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.13% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.52% அதிகம் |
| 3. | Tied Grant 2023-24 Water supply Construction of 3 Additional New Bore wells and Motors in Kamandala Naganathi Pumping Station<br>கமண்டல நாகநதி தலைமை நிரேற்று நிலையத்தில் கூடுதலாக 3 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மோட்டார் பொருத்துதல் | 12.00 | திரு. த. சத்திய நாராயணன்<br>திருமதி. எஸ். உஷாராணி | மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br>மதிப்பீட்டை விட 0.82% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | Construction of 2 Additional New Bore wells and Motors in Thachur Pumping Station<br>தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதலாக 3எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறுகள் அமைத்து மோட்டார் பொருத்துதல் | 8.00 | திரு. த. சத்திய நாராயணன்<br><br>திருமதி. எஸ். உஷாராணி | மதிப்பீட்டை விட 0.02% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.74% அதிகம் |
| 5. | Providing Distribution Main and Supply and Delivery of 100mm dia valve 80mm dia valve in Uncovered areas.<br>ஆரணி நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக குழாய் இல்லாத பகுதிகளில் 100 மிமீ விட்டம் மற்றும் 80 மிமீ விட்டம் கொண்ட குழாய் மற்றும் வால்வுகள் அமைத்தல் | 2.67 | திரு. த. சத்திய நாராயணன்<br><br>திருமதி. எஸ். உஷாராணி | மதிப்பீட்டை விட 0.23% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.31% அதிகம் |
| 6. | Solid Waste Management Supply Delivery and Erection of incinerator Machine with smoke control unit.<br>திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான புகை கட்டுப்பாட்டு அலகுடன் கூடிய எரியூட்டி இயந்திரத்தை சப்ளை செய்து பொருத்தும் பணிகள் | 10.80 | செவன்ஹில்ஸ் குருப் ஆப் கம்பெனி சென்னை<br><br>ஸ்ரீசெல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை | மதிப்பீட்டை விட 0.60% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.05% அதிகம் |
| 7. | Supply delivery and Erection of Electronic Digital Weighing Machines.<br>திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான மின்னணு டிஜிட்டல் எடை இயந்திரங்களை சப்ளை செய்து பொருத்தும் பணி. | 9.40 | செவன்ஹில்ஸ் குருப் ஆப் கம்பெனி சென்னை<br><br>ஸ்ரீசெல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை | மதிப்பீட்டை விட 0.60% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.10% அதிகம் |
| 8. | Supply Delivery and Erection of Bailing Machine<br>திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான பெய்லிங் இயந்திரம் சப்ளை செய்து பொருத்தும் பணி | 12.00 | செவன்ஹில்ஸ் குருப் ஆப் கம்பெனி சென்னை<br>ஸ்ரீசெல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை | மதிப்பீட்டை விட 0.64% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| 9. | United Grant 2023-24 Construction of Storm Water Drain in Pillaiyar koil Street, Ward No. 07.<br>வார்டு எண் 7 பிள்ளையார் கோயில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 18.93 | திரு. ரா. நேரு<br><br>திரு. என். பழனிவேலு | மதிப்பீட்டை விட 0.13% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.52% அதிகம் |

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி பணிகள் 15வது நிதிக்குழு மான்ய திட்டப் பணி என்பதாலும், பணியினை உடன் முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். கோப்பு எண். 387/2024/இ1

9. ஆரணி நகராட்சி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் 2023-2024ஆம் நிதி ஆண்டில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள 25.04.2025 அன்று கோரப்பட்ட குறுகிய கால மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணிகள் விவரம் | மதிப்பிடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டிடங்களில் புதிய கழிவறை அமைத்தல்<br>1. ஆசாத் தெரு, 2. கண்ணகி நகர், 3. கே.பி.கே. நகர், 4. எம்.ஜி.ஆர். நகர், 5. நாடகசாலை பேட்டை தெரு, 6. பொன்னுசாமி தெரு, 7. ராஜாஜி தெரு, 8. சாமித் தெரு, 9. சார்பனார் பேட்டை, 10. அம்பேத்கார் நகர் (பிள்ளையார் கோவில் அருகில்) | 3.60 | R. நேரு<br><br>D. சத்தியநாராயணன் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.06% அதிகம் |

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் என்பதாலும், பணியினை உடன் முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். கோப்பு எண். 2123/இ1/2024.

10. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 9732/2025/SS2 நாள். 03.04.2025இல் SFC-School Improvement Grant - Capital works - for the Year 2025-2026ன் கீழ் Construction / Reconstruction of Anganwadi Centres - யின் கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Name of the Work | Project Cost (Rs. In Lakhs) | SIG-Capital 2025-26 Grant | ULB Education Fund |
|---|---|---|---|---|
| 1. | Construction of Toilet at Dr. Ambethkar Nagar – Near Pillaiyar koil street, Anganwadi Centre 33606160306<br>டாக்டர் அம்பேத்கார் நகர் பிள்ளையார் கோயில் தெருவில் புதிய அங்கன்வாடி மற்றும் கழிப்பறை கட்டுதல் | 16.60 | 6.00 | 10.60 |
| 2. | Reconstruction of New Anganwadi Building Ponnusamy Street, 33606160320<br>பொன்னுசாமி தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | 6.00 | 10.60 |
| 3. | Reconstruction of New Anganwadi Building Rajaji Street, 33606160322<br>ராஜாஜி தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | 6.00 | 10.60 |
| 4. | Reconstruction of New Anganwadi Building Subramaniaswami koil street, 33606160326<br>சுப்பிரமணிசாமி கோவில் தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | 6.00 | 10.60 |
| 5. | Reconstruction of New Anganwadi Building Thiruppur Kumaran Street, 33606160327<br>திருப்பூர் குமரன் தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் பணி | 16.60 | 6.00 | 10.60 |
| 6. | Reconstruction of New Anganwadi Building Nadagasalaipettai Street, 33606160318<br>நாடகசாலைபேட்டை தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் புனரமைத்தல் | 16.60 | 6.00 | 10.60 |
| 7. | Construction of Toilet at Dr. Ambethkar Nagar – Near Pillaiyar koil street, Anganwadi Centre 33606160306<br>டாக்டர் அம்பேத்கார் நகர் பிள்ளையார் கோயில் தெருவில் புதிய அங்கன்வாடி மற்றும் கழிப்பறை கட்டுதல் | 16.60 | 6.00 | 10.60 |
| | Total | 116.20 | 42.00 | 74.20 |

அலுவலக குறிப்பு:- மன்றம் பதிவு செய்யலாம்..கோப்பு எண். 2123/2024/இ1.

11. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 9730/2025/SS1 நாள். 02.04.2025இல் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு Tamil Nadu Urban Roads Infrastructure Project (TURIP) 2025-2026 திட்டத்தின் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

Annexure – 30

**Road Sanctioned under TURIP 2025 – 2026 (Approved in 18th CPS&MC)**

| S. No | Ward No | Unicode Number | Name of the Road | Length in km CC | Proposed Carriage in m | Approved Project Cost (Rs. In Lakhs) |
|---|---|---|---|---|---|---|
| Package – 1 | | | | | | |
| 1. | 5 | 038005R026 | Providing CC Road @ Arumugam 1st Street<br>வார்டு எண் 5 ஆறுமுகம் தெரு முதல் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.18 | 6.50 | 11.04 |
| 2. | 6 | 038006S002 | Providing CC Road @ Old Santha 1Cross Street<br>வார்டு எண் 06 பழைய சாந்தா தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.02 | 3.10 | 0.58 |
| 3. | 6 | 038006S009 | Providing CC Road @ New Santha 5th Cross Street<br>வார்டு எண் 06 புதிய சாந்தா தெரு 5வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.08 | 3.10 | 2.34 |
| 4. | 8 | 038008R037 | Providing CC Road @ Perumal Street<br>வார்டு எண் 08 பெருமாள் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.16 | 6.20 | 9.36 |
| 5. | 8 | 038008R039 | Providing CC Road @ Kamatchi Amman Koil Street<br>வார்டு எண் 08 காமாட்சியம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.12 | 4.80 | 5.43 |
| 6. | 9 | 038009L004 | Providing CC Road @ Appanan Street<br>வார்டு எண் 09 அப்பண்ணன் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.05 | 3.20 | 1.36 |
| 7. | 9 | 038009L007 | Providing CC Road @ Tharani Street<br>வார்டு எண் 09 தரணித் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.07 | 3.30 | 2.30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8. | 9 | 038009L012 | Providing CC Road @ Nainear Street வார்டு எண் 09 நைணாத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.11 | 2.30 | 2.34 |
| 9. | 10 | 038010R241 | Providing CC Road @ VDS Main Road வார்டு எண் 10 வி.டி.எஸ் மெயின் ரோடில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.13 | 4.25 | 5.01 |
| 10. | 19 | 038019S039 | Providing CC Road @ Thennamara Street வார்டு எண் 19 தென்னமரத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.17 | 5.40 | 8.66 |
| 11. | 20 | 038020R119 | Providing CC Road @ Vadiyaraja Main Street வார்டு எண் 20 வடியராஜாத் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.21 | 7.50 | 14.86 |
| 12. | 21 | 038021R115 | Providing CC Road @ Dr. Ambethkar Main Street வார்டு எண் 21 டாக்டர் அம்பேத்கார் நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.18 | 4.90 | 8.32 |
| 13. | 22 | 038022S016 | Providing CC Road @ Appal Street வார்டு எண் 22 அப்பால் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 0.11 | 2.40 | 2.38 |
| | | | Total | 1.577 | | 74.00 |

அலுவலக குறிப்பு: – மன்றம் பதிவு செய்யலாம். ந.க.எண். 100/2025/இ1.

12. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான பினாயில், சுண்ணாம்புநீர், பிளிச்சிங் பவுடர் மற்றும் தளவாட சாமான்கள் வாங்க 27.05.2025 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதினை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

விலைப்புள்ளி கோரிய விவரம்

| வ. எண் | பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான பொருட்கள் | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் 1/34, காளப்பநாய்கன்பட்டி (அ) சேந்தமங்கலம்(தா), நாமக்கல் மாவட்டம். | காளிம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேஷன் R.No. 6 R.S. பில்டிங் குளக்கரை தெரு காமராஜ் நகர், நாமக்கல். |
|---|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுர் (கிலோ ஒன்றிற்கு) | ரூ. 49.00/- | ரூ. 47.20/- |
| 2 | சுண்ணாம்பு நீர் | ரூ. 10.00/- | ரூ. 9.45/- |
| 3 | பினாயில் (லிட்டர் ஒன்றிற்கு) | ரூ. 80.00/- | ரூ. 75.00/- |
| 4 | லெமன்கிராஸ் ஆயில் (லிட்டர் ஒன்றிற்கு) | ரூ. 2400.00/- | ரூ. 2360.00/- |

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்,
2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள காளியம்மன் டிரேடர்ஸ் கார்ப்பரேஷன் நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்தரவு வழங்கியதையும் அதற்குண்டான செலவினம் மேற்கொண்டதினையும் மன்றம் ஏற்கலாம். கோப்பு எண். 528/2012/எச்1

13. ஆரணி நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும், இருந்து பெறப்படும் மக்கும் குப்பை மக்காத குப்பைகளை தினசரி அகற்றப்பட வேண்டி உள்ளது. தற்போது பெறப்பட்டு வரும் மக்காத குப்பைகளில் பெறப்படும் பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி செய்ய முடியாத மக்காத குப்பைகளை தனியார் மூலம் பணியாளர்கள் நியமனம் செய்து தரம் பிரித்து அவர்களது சொந்த செலவில் BAILLING செய்து சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பிவைக்கும் பணிக்கு டன் ஒன்றுக்கு ரூ. 3500/- வீதம் பணி மேற்கொள்ள அனுமதியும் அதற்கான தோராய செலவினம் ரூ. 9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினம் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

கோப்பு எண். 526/2025/எச்1
கோப்பு எண். 2294/2024/இ1

14. அரசாணை (நிலை) எண். 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 24.08.2022ன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 33553/2022/EA2-SWM-13, நாள். 10.01.2023 ஆரணி நகராட்சியில் உள்ள வார்டு எண்கள் 01 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்தம் வழங்க அனுமதித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 33553/2022/EA2-SWM-12, நாள். 10.01.2023ன்படி நாள் ஒன்றுக்கு 21.46 மெட்ரிக் டன் திடக் கழிவுகளை கையாள டன் ஒன்றுக்கு ரூ. 4042.73 வீதம் வழங்க அனுமதித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள M/s KAY YES Construction Katpadi, Vellore என்ற நிறுவனம் 01.06.2023 முதல் ஆரணி நகராட்சியில் தற்போது வரை பணிகள் மேற்கொண்டு வருகிறது. மேற்படி M/s KAY YES Construction Katpadi, Vellore என்ற நிறுவனத்தின் இரண்டாம் ஆண்டு ஒப்பந்த காலம் 31.05.2025 அன்று முடிவடைவதால் மேலும், ஒரு வருட காலத்திற்கு (01.06.2025 முதல் 31.05.2026 வரை) பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- M/s KAY YES Construction, Katpadi, Vellore என்ற நிறுவனத்திற்கு 01.06.2025 முதல் 31.05.2026 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு பணி நிட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2019/2022/எச்1

15. மனுதாரர் திருமதி. V. பாக்கியலட்சுமி க/பெ S.K. வெங்கடேசன், 30/4, நீதிபதி விஜயரங்கன் தெரு, சைதாப்பேட்டை, ஆரணி என்பவர் ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு – A, பிளாக் – 6, நகரளவை எண். 42/4A1, 42/4B 42/19ல் அமைந்துள்ள 1.74 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி வேண்டி உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, திருவண்ணாமலை அவர்களுக்கு விண்ணப்பம் செய்ததின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு தறையால் ந.க.எண். NBTYNPEU/2024/TVM/2024/TCP, நாள். 29.10.2024ல் உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு வடிவமைப்பு வரைபடம் அனுப்பப்பட்டது. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தான பத்திரம் ஆவண எண். 6687/2024, 1405/2024 மற்றும் 6800/2024 ஆகிய மூன்று ஆவணங்கள் மூலம் நகராட்சிக்கு மனைப்பிரிவின் உரிமையாளர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர மன்றம் பின்னேற்பு வழங்கவும் மற்றும் நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரர் பொது ஒதுக்கீடு இடங்களை ஒப்படைப்பு செய்ததின் அடிப்படையில் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, திருவண்ணாமலை அவர்களால் இறுதி ஒப்புதல் ந.க.எண். NBTYNPEU/2024/TVM/2024/TCP, நாள். 05.12.2024ல் என்ற எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது இடங்கள், மேல்நிலைத்தொட்டி அமைக்க பொது இடம், மின்சார கடத்தியின் புலம் (Transformer land) ஆகிய இடங்களுக்கு கம்பிவேலி அமைத்தும் மற்றும் வருவாய் ஆவணங்களில் ஆரணி நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்து வரப்பெற்றுள்ளது. அரசாணை நிலை எண். 79(வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி {UD4 (3)} துறை நாள். 04.05.2017ன் படி கூராய்வு கட்டணம் ரூ. 38,000/- நகராட்சி கருவூல எண். 038/AR2/1/25-26/0000148, நாள். 08.04.2025லும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி-2, நாள். 20.10.2022ல் நிபந்தனை 9, 10ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகள் 5 வருடங்கள் அல்லது 60% மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைவிரிவு உரிமையாளரை சாரும் என்பதால் வைப்புத் தொகையாக ரூ. 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மனைப்பிரிவின் பரப்பளவு 1.74½ ஏக்கருக்கு பராமரிப்பு பணிக்கான வைப்புத் தொகை ரூ. 2,00,000/- செலான் எண். 038/AR2/1/25-26/0000664 நாள். 17.04.2025லும், அபிவிருத்தி கட்டணம் நாள். 08.04.2025ல் ரூ. 35,310/ம் செலான் எண். 038/AR2/1/25-26/0000149 நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரவின் உரிமையாளரால் செலுத்தப் பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண். 79(வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி {UD4 (3)} துறை நாள். 04.05.2017 மற்றும், நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், வேலூர் அவர்களின் ந.க.எண். 130/2011/வே.ம.3, நாள். 14.09.2017ல் தெரிவித்துள்ளதற்கிணங்க நிலம் உபயோக மாற்றம் செய்வதற்கான நில மதிப்பு கட்டணம் ரூ. 11,29,000/-ஐ நாள். 15.04.2025ல் மனைப்பிரிவு உரிமையாளரால் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க ரூ. 1,00,000/- செலான் எண். 038/AR2/1/25-26/0000678, நாள். 17.04.2025லும், தெருவிளக்கு கம்பம் அமைக்க ரூ. 1,20,000/- செலான் எண். 038/AR2/1/25-26/0000679, நாள். 17.04.2025லும் நகராட்சி கருவூலத்தில் நகராட்சி உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகவே, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை - 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி-2, நாள். 20.10.2022ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படியும் செயல்பட மனுதாரருக்கு அறிவுறுத்தவும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். 2121/2024/எப்1

16. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31.03.2025 அன்று பணியில் இருந்து ஓய்வு பெற்ற திரு. ஆ. பீமன் என்பவருக்கு கீழ்க்கண்டவாறு தொகை ரூ. 39194/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சிறப்பு சேமநல நிதி | | ரூ. 2960/- |
| சிறப்பு சேமநலநிதிக்கான வட்டி | - | ரூ. 26234/- |
| நிர்வாக பங்குத் தொகை | - | ரூ. 10.000/- |
| மொத்தம் ரூ. | - | ரூ. 39194/- |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**கோப்பு எண். 0379/2025/பி2**

17. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த காலத்தில் 02.11.2009 அன்று திருமதி. பா. கஸ்தூரி என்பவர் இறந்து விட்ட அவரின் மகள் திருநங்கை பா. மைக்கேல்ராஜ் என்ற பிருந்தா, என்பவருக்கு கீழ்க்கண்டவாறு தொகை ரூ. 16942/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சிறப்பு சேமநல நிதி | | ரூ. 2960/- |
| சிறப்பு சேமநலநிதிக்கான வட்டி | - | ரூ. 13982 |
| நிர்வாக பங்குத் தொகை | - | ரூ. - |
| மொத்தம் ரூ. | - | ரூ. 16942/- |

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.
**கோப்பு எண். 1602/2025/பி2.**

18. ஆரணி நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் நகரமைப்பு பிரிவில் உள்ள செய்திதாள் விளம்பரக் கட்டணங்கள் ஆகியவற்றிக்கு 2025 - 2026ம் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ. 5,00,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**கோப்பு எண். 3034/2015/எப்1**
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்

19. திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்ட வருவாய் வட்டாட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண். ஆ4/2049/2025, நாள். 22.05.2025, ந.க.எண். ஆ4/2544/2025, நாள். 22.05.2025 மற்றும் ந.க.எண். ஆ4/3157/2025, நாள். 02.06.2025, இல் ஆரணி நகர பகுதிகளில் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட அரசு புறம்போக்கு நிலங்களில் கீழ்கண்டவாறு5 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பு வீடுகள் கட்டி குடியிருந்து வரும் நபர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின்கீழ் வரன்முறைப் படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்கிட கீழ்க்கண்ட புல எண்களை தேர்வு செய்து அவ்விடங்களை கிராம நத்தமாக வகை மாற்றம் செய்யவும் அதற்கான நகராட்சியின் இசைவினை நகரமன்றத் தீர்மான வடிவில் அனுப்பி வைத்திடுமாறு கோரியுள்ளார் .

| வ. எண் | வார்டு, பிளாக் எண், நகரளவு எண் & அமைவிடம் | வகைப்பாடு | விஸ்தீரணம் (ஹெக்டேர்) | மொத்த எண்ணிக்கை | ஆக்கிரமிப்பாளர்கள் வசித்து வரும் ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு. C, பிளாக் எண். 6, நகரளவு எண். 7/2, 3/2 (வார்டு எண். 1, பெரியார் நகர் & மணியம்மை வீதி) | வட்டார வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு அருகில் | 0.0208.0 (ம) 0.0042.0 | 4 | 20 ஆண்டுகள் |
| 2 | வார்டு. F, பிளாக் எண். 7, நகரளவு எண். 1. | பூந்தோட்டம் அரசு புறம்போக்கு நிலம் | 0.1502.0 | 29 | 20 ஆண்டுகள் |
| 3 | வார்டு. C, பிளாக் எண். 4, நகரளவு எண். 30/2. | தரிசு நிலம் | 0.1318.5 | 16 | 20 ஆண்டுகள் |
| 4 | வார்டு. C, பிளாக் எண். 6, நகரளவு எண். 7/1. | மைதானம் | 2.6696.5 | 6 | 20 ஆண்டுகள் |
| 5 | வார்டு. C, பிளாக் எண். 4, நகரளவு எண். 30/1. | தீயணைப்பு நிலையம் | 0.5329.0 | 8 | 20 ஆண்டுகள் |

மேற்கண்ட நகரளவை எண்களில் வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு ஏதுவாக மன்றத்தின் இசைவினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. அரசாணை (நிலை) எண். 318, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 30.08.2019.
2. அரசாணை (நிலை) எண். 97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 21.02.2025.
3. அரசாணை (நிலை) எண். 205, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள். 26.04.2025.
4. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்கள் படி வீட்டுமனை பட்டா வழங்குவதற்கு ஏதுவாக மன்றத்தின் இசைவினை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
5. முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 507/2025/எப்1.**

20. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில்

உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள், குடிநீர் விநியோகம், குடிநீர் பராமரிப்பு பணிகள், புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பழுது பார்த்தல், குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் பணிபுரிதல் நகரில் உள்ள சிறுமின் விசை பம்புகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். F3/1977974 / 2024 நாள் 20.05.2024ன்படி SKILLED LABOUR ஒரு நாள் கூலி ரூ.414/- வீதம் 12 பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர் 1 நபருக்கு 628/- வீதம் தனியார் ஸ்ரீ சாய்பாபா ஆடவர் குழுவின் மூலம் பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள மே 2025 மாதம் முதல் ஜீன் 2025 வரை நபர் 1க்கு ரூ.414/- வீதம் 12 பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர் 1 நபருக்கு 628/- வீதம் 30 நாட்கள் = 167880/-(1,68,000) 2 மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.3,36,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியாளர்களின் ஊதியத்தை கருத்தில் கொண்டு மே மாதம் 2025 ஊதியம் வழங்க வேண்டி நகர மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மேற்படி பணியாளர்களின்ஊதியத்தை கருத்தில் கொண்டு மே மாதம் 2025 ஊதியம் வழங்க வேண்டி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண்766/ 2023/ இ1)

21. இந்நகராட்சியில் -2025-26- ஆண்டின் பொது பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளுக்கு தேவையான எழுதுப்பொருள் படிவங்கள் பேப்பர் மற்றும் கணினிகளின் பிரிண்டர்கள் அதை சார்ந்த உபகரணங்கள் தேவைப்படுவதால் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சங்கம் தி.மலை மாவட்ட எழுதுப்பொருட்கள் மற்றும் அச்சகவேலை தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மூலம் நேரடியாக கொள்முதல் செய்ய தோராயமான செலவினம் ரூ.500000/-(லட்சம்) மட்டும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

22. ஆரணி நகராட்சியின் வார்டு எண்.10, பெரியார் நகர் பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P. NO.14562/2024 மகேஸ்வரி, 14563/2024, கே.சண்முகம், 14886/– முருகன் மற்றும் 15191/2024, எஸ்.இலக்கியா/2024, நகராட்சி சார்பாக முறையே 4 வழக்குகளுக்கு தனித் தனியே திரு.பி.ஸ்ரீனிவாஸ், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியதற்கு உண்டான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.80000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

மேலும் இச்செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கவும்.

ந.க.எண்.1209/இ2/2024

23. ஆரணி நகராட்சியின் வார்டு எண்.10, பெரியார் நகர் பகுதியில் குடிநீர் இணைப்பு வழங்குவது தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (CONTEMPT PETITION) எண்.1029/2025 மகேஸ்வரி, 1151/2025– கே.சண்முகம், 1004/2025 முருகன் மற்றும் 1152–2025, எஸ்.இலக்கியா/2025, நகராட்சி சார்பாக முறையே 4 வழக்குகளுக்கு தனித்தனியே திரு.பி.ஸ்ரீனிவாஸ், வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியதற்கு உண்டான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.60000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

இச்செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கவும்.

ந.க.எண்.1209/இ2/2024

24. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள், குடிநீர் விநியோகம், குடிநீர் பராமரிப்பு பணிகள், புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பழுது பார்த்தல், குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் பணிபுரிதல் நகரில் உள்ள சிறுமின் விசை பம்புகள் பழுதுபார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர்திருவண்ணாமலை அவர்களின் செயல் முறை கடித ந.க.எண்.K/Dis.F3/3421784/2025 நாள்

13.06.2024ன்படி SKILLED LABOUR ஒருநாள் கூலி ரூ.422/- வீதம் 12 பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர் 1 நபருக்கு 641/- வீதம் தனியார் ஸ்ரீ சாய்பாபா ஆடவர் குழுவின் மூலம் 13 பணியாளர்களை பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள ஜீலை 2025 மாதம் முதல் மார்ச் 2026 வரை நபர் 1க்கு ரூ.422/- வீதம் 12 நபர்களுக்கும் மற்றும் ஓட்டுநர் 1 நபருக்கு 641/- வீதம் 30 நாட்கள் = 1,71,150/- 9 மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ.15,40,350/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் மேற்படி பணியாளர்களின் ஊதியத்தை கருத்தில் கொண்டு மே மாதம் 2025 ஊதியம் வழங்க வேண்டி நகர மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் (கோப்பு எண்766/ 2023/ இ1)

25. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள், குடிநீர் விநியோகம், குடிநீர் பராமரிப்புபணிகள், புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பழுது பார்த்தல், குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் பணிபுரிதல் நகரில் உள்ள சிறுமின் விசை பம்புகள்பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் பற்றாக் குறையாக உள்ளதால், மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.K/Dis/F3/3421784/ 2025 நாள் 13.06.2024ன்படி SKILLED LABOUR ஒருநாள் கூலி ரூ.422/- வீதம் 14 பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர் 1 நபருக்கு 628/- வீதம் தனியார் ஸ்ரீஆஞ்சநேய ஆடவர் குழுவின் மூலம் ஆட்களை பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், அப்பணியாளர்களுக்கு ஜீலை 2025 மாதம் முதல் மார்ச் 2026 வரை நபர் 1க்கு ரூ.422/- வீதம் 14 நபர் களுக்கும் 30 நாட்கள் =177240/- 9 மாதங்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் செலவினம் 15,95,160/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்1046/ 2023/ இ1)

26. ஆரணி நகராட்சி கணினி அறையில் உள்ள UPS உடன் இயங்கும் பேட்டரிகள் வாங்கி சுமார் 10ஆண்டுகள் ஆகின்றது. மேற்படி பேட்டரிகள் பழுதடைந்துள்ளதால் மின்தடை ஏற்படும் சமயங்களில் கணினியில் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் பதிவுகள் Save செய்யமுடியாமல் மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் நகராட்சியின் வரிவசூல் முழுவதுமாக பாதிப்படைகிறது.

எனவே கணினி அறையில் உள்ள பேட்டரிகளை அகற்றி விட்டுபுதியதாக 10 எண்ணிக்கை 150 HP பேட்டரிகள் வாங்கி கொள்ள ஆகும் செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்1558/ 2024/ இ1)

27. ஆரணி நகராட்சியில் வசூல் மையத்தில் தற்போது உள்ள கணினி இயந்திரங்கள் மற்றும் லேசர் பிரிண்டர்கள் கடந்த 2017ம் ஆண்டு வாங்கப்பட்டது. தற்போது அந்த கணினி இயந்திரங்கள் மற்றும் லேசர் பிரிண்டர்கள் மிகவும் பழுதடைந்து இயக்குவதற்கு சிரமமாக உள்ளது. இதனால் வசூல் பணிகள் பாதிப்படைகிறது.

எனவே நிர்வாக நலன் கருதியும், வரி செலுத்த வரும் பொது மக்களுக்கு உடனுக்குடன் தங்கு தடையின்றி ரசீதுகள் வழங்க ஏதுவாக வசூல் மையத்திற்குபுதியதாக 3 எண்ணிக்கை வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்1558/ 2024/ இ1)

28. மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 3000/2025/அ6 நாள் 17.06.2025ல் ஆரணி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2025-2026ன் கீழ்

பின்வரும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | ஆரணி கோட்டை மைதானம் – 12 மீட்டர் உயர்மின் கோபுரம் 100W–6No. சோலார் மின்விளக்கு அமைத்தல் (Base Foundation +12Mt Hight / 100W Solar LED Light) Ward No.10 | 7.50.000/– |

அலுவலக குறிப்பு :– 1. மன்றம் பதிவு செய்யலாம். (கோப்பு எண் 502/2025/இ1)

29. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பிரதான குழாய் 350mm Dia லாடவரம் கிராம பகுதியில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் விணாகிறது. இதனால் தினசரி குடிநீர் விநியோகம் நகர் பகுதிக்கு வருகின்றது. குடிநீர் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி உடைப்பு சரி செய்யவும். தச்சூர் நிரேற்று நிலையத்திலிருந்து வரும் 300mm Dia குடிநீர் பிரதான குழாய் தச்சூர் கிராமம் மற்றும் வடுகசாத்து ஆகிய கிராம பகுதியில் உடைப்பு ஏற்பட்டுள்ளது மேற்படி உடைப்பு பணிகளை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு எண் 1558/2024/இ1)

30. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் ஆரணி அலுவலக வளாகத்தில் உள்ள நீர் உந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள 20HP, 35HP ஆகிய மின் மோட்டார்கள் பழுது எற்பட்டு குடிநீர் விநியோகம் செய்ய சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி மின் மோட்டார்கள் பழுதினை சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு எண் 1558/2024/இ1)

31. ஆரணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 மருகுரான் தெரு, வார்டு எண் 17,18 பாரதியார் தெரு, விஸ்வேஸ்வரய்யா தெரு, தாது தெரு ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் கால்வாய்க்கு கீழ் பகுதியில் அமைந்துள்ளதால், குடிநீர் விநியோகம் செய்யும்போது கழிவுநீர் கலந்து வருவதாக பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். இதனால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டியுள்ளால், மேற்படி பகிர்மான குழாயினை மாற்றி அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(கோப்பு எண் 1558/2024/இ1)

32. ஆரணி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் 350 எண்ணிக்கை சிறுமின்விசை பம்புகள் இயங்கி வருகிறது. இதில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் உள்ள குழாய்கள் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாகிறது. மேலும், நகர மன்ற உறுப்பினர்கள் புகார் தெரிவித்துள்ளதின்பேரில் சுமார் 200 எண்ணிக்கையில் குழாய்கள் மாற்றி அமைக்கவும், மற்றும் சிறுமின்விசை பம்புகள் 1HP மின் மோட்டார்கள் 30 எண்ணிக்கை காயில் கட்டி பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்காலம். மேலும், மேற்படி செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(கோப்பு எண் 1558/2024/இ1)

33. ஆரணி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காந்தி ரோடு காமராஜர் சிலைக்கு எதிர்வரும் காமராஜர் பிறந்த நாளான 15.07.2025 அன்று வருவதை முன்னிட்டு அன்னார் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் காமராஜர் சிலை, மற்றும் சுற்றுச் சுவர் வர்ணம் பூசுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

34. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் பொது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்புக் குழுவின் 20வது கூட்ட நடவடிக்கை நாள் 23.04.2025ல் ஆரணி நகராட்சி கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் 2025–2026ன் கீழ் ஆரணி நகராட்சி காய்கறி மார்கெட் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.40 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த பேருந்து நிலையம் மற்றும் பல்பொருள் வணிக வளாக கட்டிடம் ஆகியவைகளை இடித்து விட்டு புதியதாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 12.06.2025 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது மேல் நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் முடியும் நாள் வரையில், ஆரணி நகராட்சி மையப்பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுத் துறைக்கு சொந்தமான கோட்டை மைதானப் பகுதியில் தற்காலிக பேருந்து நிலையம் இயக்கி கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்ப விளையாட்டுத் துறைக்கு சொந்தமான கோட்டை மைதானப் பகுதியில் தற்காலிக பேருந்து நிலையம் இயக் கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(கோப்பு எண் 1088/2024/இ1)

35. ஆரணி நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025–2026ன் கீழ் ஆரணி நகராட்சி காய்கறி மார்கெட் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.40 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த பேருந்து நிலையம் மற்றும் பல்பொருள் வணிக வளாக கட்டிடம் ஆகியவைகளை இடித்து விட்டு புதியதாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 12.06.2025 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது மேல் நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் முடியும் நாள் வரையில், ஆரணி நகராட்சி மையப்பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுத் துறைக்கு சொந்தமான கோட்டை மைதானப் பகுதியில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்படும் இடத்தில் பொது மக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் வழங்க வேண்டி 4 எண்ணிக்கை தற்காலிக குடிநீர் இணைப்புகள் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்படி, குடிநீர் நிதியிலிருந்து பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற கடிதம் அனுப்பவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(கோப்பு எண் 1088/2024/இ1)

36. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு KNMT 2025–26 திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் பணிகள் மதிப்பீடு ரூ.29.00 இலட்சத்தில் மேற்கொள்ள 29.05.2025 அன்று கோரப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்த்தாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | ஆரணி நகராட்சி வார்டு எண். 16, பாலாஜி நகர் முதல் குறுக்குத்தெரு, வார்டு எண்.17 பிரகாஷ் நகர் மற்றும் வார்டு எண். 22 அப்பால் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | ரூ.29.00 | R. நேரு<br><br>D. சத்தியநாராயணன் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.11% அதிகம் |

அலுவலக குறிப்பு :– 1. மன்றம் பதிவு செய்யலாம். (கோப்பு எண் 426/2025/இ1)

37. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, ஆரணி நகராட்சிக்கு KNMT 2025–2026 திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் பணிகள் மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தில் மேற்கொள்ள 29.05.2025 அன்று கோரப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1. | ஆரணி நகராட்சி வார்டு எண்.22 பரசுராமன் தெருவில் புதியதாக குழந்தைகள் விளையாட்டுப்பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல் | ரூ.20.00 | S. ஜெகன்மோகன்<br><br>S. உஷாராணி | மதிப்பீட்டை விட 0.05% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.19% அதிகம் |

அலுவலக குறிப்பு :– 1. மன்றம் பதிவு செய்யலாம். (கோப்பு எண் 426/2025/இ1)

38. மனுதாரர் திரு.N. சதீஷ் மற்றும் N. ஜெய்சங்கர், எண். 25/26, ஷெனாய் நகர்,
இரமையா தெரு, சென்னை – 30 என்பவர்கள் ஆரணி நகராட்சி எல்லைக்குட்
பட்ட வார்டு – D, பிளாக்1, நகரளவை எண். 11/40, 11/41 ல் அமைந்துள்ள 1.89½
ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி வேண்டி உதவி
இயக்குநர், நகர ஊரமைப்பு துறை, திருவண்ணாமலை அவர்களுக்கு விண்ணப்பம்
செய்ததின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துறையால் ந.க.எண்.
GNV4G880/2025/TVM/2025/TCP, நாள். 26.03.2025 ல் உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு
வடிவமைப்பு வரைபடம் அனுப்பப்பட்டது. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலை
(ம) பொது ஒதுக்கீடு இடங்களை தான பத்திர ஆவண எண். 2841/2025 மூலம்
நகராட்சிக்கு மனைப்பிரிவின் உரிமையாளர்களால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகர
மன்றம் பின்னேற்பு வழங்கவும் மற்றும் நகராட்சிக்கு தானபத்திரம் மூலம் மனுதாரர்
பொது ஒதுக்கீடு இடங்களை ஒப்படைப்பு செய்ததின் அடிப்படையில் உதவி
இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, திருவண்ணாமலை அவர்களால் இறுதி
ஒப்புதல் ந.க.எண். GNV4G880/2025/TVM/2025/TCP, நாள். 07.04.2025 என்ற
எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.
79 (வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி {UD4 (3)}) துறை நாள். 04.05.2017ன் படி
கூராய்வு கட்டணம் ரூ. 45,000/– நகராட்சி கருவூல எண். 038/AR2/1/25–
26/0004838, நாள். 27.06.2025லும் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை 28
அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி–2, நாள். 20.10.2022ல்
நிபந்தனை 9, 10ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி
போன்ற அடிப்படை வசதிகள் 5 வருடங்கள் அல்லது 60% மனைகள் அபிவிருத்தி
அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும்
பொறுப்பு மனைபிரிவு உரிமையாளரை சாரும் என்பதால் வைப்புத் தொகையாக ரூ.
1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி
பரப்பளவிற்கு என கணக்கிட்டு வசூலிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்
பட்டுள்ளது. அதனடிப்படையில் மனைப் பிரிவின் பரப்பளவு 1.89½ ஏக்கருக்கு
பராமரிப்பு பணிக்கான வைப்புத் தொகை ரூ.2,00,000/–, செலான் எண்.
038/AR2/1/25–26/0004834 நாள். 27.06.2025–லும், அபிவிருத்திக்
கட்டணம் நாள். 27.06.2025ல் ரூ.38,345/–ம் செலான் எண்.038/AR2/1/25–
26/0004839 நகராட்சி கருவூலத்தில் மனைப்பிரிவின் உரிமையாளர்களால்
செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை நிலை எண். 79 (வீட்டுவசதி மற்றும் நகர்புற
வளர்ச்சி {UD4 (3)}) துறை நாள். 04.05.2017 மற்றும், நகர் ஊரமைப்பு துறை
இயக்குநர், வேலூர் அவர்களின் ந.க.எண். 130/2011/வே.ம.3, நாள்.14.09.2017ல்
தெரிவித்துள்ளதற்கிணங்க நிலம் உபயோக மாற்றம் செய்வதற்கான நில மதிப்பு
கட்டணம் ரூ. 12,25,000/– ஐ நாள். 27.06.2025ல் மனைப்பிரிவு உரிமையாளர்களால்
அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவின் உரிமையாளர்களால்
சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் பகிர்மானக் குழாய்கள், சூரிய மின்
விளக்கு வசதி ஆகியவற்றை செய்து முடித்துள்ளதாக நகராட்சி பொறியாளர்
தம்முடைய 27.06.2025ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஆகவே, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை– 28, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி–2, நாள். 20.10.2022ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்கள் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படியும் செயல்பட மனுதாரருக்கு அறிவுறுத்தவும், மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம். கோப்பு எண்: 387/2025/எப்1

39. ஆரணி நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025–2026ன் கீழ் ஆரணி நகராட்சி காய்கறி மார்கெட் அருகில் உள்ள புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.40 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பயன்பாட்டில் உள்ள பழுதடைந்த பேருந்து நிலையம் மற்றும் பல்பொருள் வணிக வளாக கட்டிடம் ஆகியவைகளை இடித்து விட்டு புதியதாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள 12.06.2025 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது மேல் நடவடிக்கையில் உள்ளது. மேலும், மேற்படி பழுதடைந்துள்ள பேருந்து நிலையத்தினை இடித்து அப்புறப் படுத்திடவும், அதற்கான உத்தேச தோராய செலவினம் ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1. | மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. |
| | 2. | மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |
| | 3. | மேற்படி, பேருந்து நிலையத்தினை இடித்து அப்புறபடுத்திடும் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற கடிதம் அனுப்பவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |

(கோப்பு எண் 1088/2024/இ1)

40. ஆரணி நகராட்சி பகுதிகளில் நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 01.03.2025 முதல் 31.05.2025 வரையிலான காலத்திற்கு ஆரணி மல்லிகை சுய உதவிக்குழுவிற்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது. தற்போது பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி குழுவிற்கே மீண்டும் 01.06.2025 முதல் 30.09.2025 வரை பணி நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்த தினசரி கூலி அடிப்படையில் கூலி தொகை வழங்கவும். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண்: 538/2020/எச்1)

41. ஆரணி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படும் ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம் தச்சூர் தலைமை தலைமை நீரேற்று நிலையம் மற்றும் ஆரணி கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம் ஆகிய இடங்களில் உள்ள திரவ குளோரின் பம்பிங் செய்யும் டோசிங் பம்பு மோட்டார்கள் பழுதடைந்துள்ளதால் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி டோசிங் பம்புகள் 3 எண்ணிக்கை புதியதாக மாற்றி அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும் மேற்படி செலவினம் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
(கோப்பு எண் .1558/2024/E1.

நகராட்சி அலுவலகம்
ஆரணி

நகர மன்றத்தலைவர்
ஆரணி நகராட்சி